## மார்ச்– 01 –வெள்ளி

**"ஆண்டவரே, நீர் போற்றுதற்கு உரியவர்" – திபா 119 : 12**

**முதல் வாசகம் : சீராக்கின் ஞானம்6 : 5 – 17**

இன் சொல் நண்பர் தொகையைப் பெருக்கும் பண்பான பேச்சு உன் மதிப்பை உயர்த்தும். அனைவரோடும் நட்புடன் பழகு. ஆனால் ஆயிரத்தில் ஒருவரே உனக்கு ஆலோசகராய் இருக்கட்டும்.ஆய்ந்து நட்புக்கொள் நண்பரையும் விரைவில் நம்பிவிடாதே.தன்னலம் தேடும் நண்பர்களும் உண்டு அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்கமாட்டார்கள். பகைவர்களாய் மாறும் நண்பர்களும் உண்டு அவர்கள் உங்கள் பிணக்கை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி, உனக்கு இழிவைக் கொண்டு வருவார்கள்.உன்னுடன் விருந்துண்ணும் நண்பர்களும் உண்டு அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்கமாட்டார்கள்.நீ நல்லநிலையில் இருக்கும்போது, அவர்கள் உன் உயிருக்கு உயிரான நண்பர்களாய் இருப்பார்கள் உன் பணியாளர்களை ஆட்டிப் படைப்பார்கள்நீ தாழ்ந்துவிட்டால் உனக்கு எதிராய் அவர்கள் மாறுவார்கள் உன் முகத்தில் விழிக்கமாட்டார்கள்.உன் பகைவர்களிடமிருந்து விலகிநில் உன் நண்பர்களிடம் எச்சரிக்கையாய் இரு.நம்பிக்கைக்குரிய நண்பர்கள் பாதுகாப்பான புகலிடம் போன்றவர்கள் இத்தகைய நண்பர்களைக் கண்டவர்கள் புதையலைக் கண்டவரைப் போன்றவர்கள். நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவுமில்லை. அவர்களது தகைமைக்கு அளவுகோல் இல்லை.நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நலம் அளிக்கும் மருந்து போன்றவர்கள் ஆண்டவருக்கு அஞ்சுவோரே இத்தகைய நண்பர்களைக் கண்டடைவர்.ஆண்டவருக்கு அஞ்சுவோரே முறையான நட்புப் பேணுவோர். அவர்களை அடுத்தவர்களும் அவர்களைப்போலவே இருப்பார்கள்.

**பதில்பாடல் :** உம் கட்டளைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும்

**நற்செய்தி : மாற்கு10 : 1 - 12**

இயேசு அங்கிருந்து புறப்பட்டு யூதேயப் பகுதிகளுக்கும் யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள் அவரிடம் வந்து கூடினர். அவரும் வழக்கம் போல மீண்டும் அவர்களுக்குக் கற்பித்தார். பரிசேயர் அவரை அணுகி, ”கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?” என்று கேட்டு அவரைச் சோதித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக, ”மோசே உங்களுக்கு இட்ட கட்டளை என்ன?” என்று கேட்டார். அவர்கள், ”மோசே மணவிலக்குச் சான்றிதழ் எழுதி அவரை விலக்கிவிடலாம் என்று அனுமதி அளித்துள்ளார்” என்று கூறினார்கள். அதற்கு இயேசு அவரிகளிடம்,”உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே அவர் இக்கட்டளையை எழுதி வைத்தார். படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள். ”ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். “இனி அவர்கள் இருவர் அல்ல் ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” என்றார். பின்னர் வீட்டில் இதைப் பற்றி மீண்டும் சீடர் அவரைக் கேட்டனர். இயேசு அவர்களை நோக்கி, ”தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் அவருக்கு எதிராக விபசாரம் செய்கிறான். தன் கணவரை விலக்கிவிட்டு வேறொருவரை மணக்கும் எவளும் விபசாரம் செய்கிறாள்” என்றார்.

**தியானம்:** நற்செய்தியில் ஆண்டவர் இயேசு திருமணத்தின் புனிதத்தன்மையை, திருமண உறவென்றால் என்ன? உண்மையான திருமணத்தின் பொருள் என்ன? திருமணம் எனப்படுவது எல்லாம் வல்ல கடவுளின் திட்டத்தின்படி நடக்கக்கூடிய மாபெரும் நிகழ்வு என்பதை தெளிவாகச் சொல்கிறார். திருமணம் என்பது வெறும் உடல் உறவு சம்பந்தப்பட்டது மாத்திரமல்ல, மாறாக, திருமணத் தம்பதியரின் ஆன்மாவின் புனிதம் சம்பந்தப்பட்டது. திருமணத்தில் இணையும் ஆண் பெண் வழியாக இந்த உலகத்திற்குக் கடவுள் பொழிகிற ஆசீர்வாத நிகழ்வின் மகிமை காக்கப்பட்டு, அதன் புனிதம் போற்றப்பட வேண்டும். மேற்குலக நாடுகளில் அதிகமான குடும்பங்கள் முறிந்த திருமணப் பின்னணியில் அல்லல்படும் இன்றைய சூழலில் எமது மத்தியிலும் விவாகரத்துக்கள் அதிகரிப்பதாகச் செய்திகள் வருகின்றன. இருமணம் ஒத்து உருவாக்கப்பட்ட திருமண முறிவு மனித வாழ்வின் சீரழிவென மூத்தோர் தமது பட்டறிவால் தெரிவிப்பர். ஆணும், பெண்ணும் திருமணத்தில் இணைந்து, இறுதிவரை இணையும்போது மனித சமுதாயம் மகிழ்வோடு வாழும். திருமண முறிவு, விவாகரத்துத் தொடருமாயின், அது திருமண உறவைப் பிரித்து அழிக்கும் முயற்சி என்பது பலரது கருத்தாகும். நற்செய்தியில் இயேசுவை எப்படியாவது சிக்கவைக்க முயலும் பரிசேயர்களின் சதியில் மணவிலக்கு பற்றிய கேள்வி முன்வைக்கப்பட்டு, இயேசு எந்தப்பதிலைச் சொன்னாலும் அவருக்குப் பாதகமாக மாற வாய்ப்பிருப்பது வெளிப்படுகிறது. ஏனெனில், இயேசு மணவிலக்கை ஆதரித்தால், தனது முறைகேடான திருமண வாழ்வை எதிர்த்ததால் திருமுழுக்கு யோவானை சிறையிலடைத்துக் கொன்ற ஏரோதுவின் பிடியில் சிக்குவதோடு, மணவிலக்கை எதிர்த்தால் மோசேயின் சட்டத்திற்கு எதிராகப் பேசிய குற்றம் சுமர்த்தப்படும். எந்தப்பதிலும் இயேசுவுக்கு மோசமான விளைவுகளை உண்டாக்கக் கூடியதாக இருக்கும். எப்படியாயினும், கடினமான சூழ்நிலைக்கேற்ற பதிலை இயேசு வெளிப்படுத்துவதை நாம் காணலாம். திருமணம் என்பது பிரிக்க முடியாத பந்தம் மட்டுமல்ல என்பதை இயேசு ஆணித்தரமாக வெளிப்படுத்தி, திருமணம் என்பது கடவுளால் இணைக்கப்பெற்ற ஓர் உன்னதமான உறவு. அவ்வாறான உறவைப் புனிதமாக வாழவேண்டும் என்பது இயேசு விடுக்கின்ற அழைப்பு என்பதனை உணர்ந்து ஏற்றுக்கொண்டு எமது வாழ்வைத் தொடருவோம்.